Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னுகம்: வெகுதானிய௵ கார்த்திகை௴ ௨௬ (11-12-38) { இல. 9

ஆசிரியர் சங்கங்கள்

நமது நாட்டின் பல பாகங்களிலும் ஆசிரியர் சங்கங்கள் நடைபெற்று வருகின்றன. இச்சங்கங்களில் ஆசிரியர்கள் செய்யும் வேலைகள், யாவை! சங்கங்களில் ஆசிரியர்கள் தங்கள் வேதனத்தைப்பற்றி அல்லது தங்களைப் பாதிக்கும் வேறு விஷயங்களைப்பற்றித் தீர்மானங்கள் செய்கின்றார்களேயொழிய நாட்டுக் கல்வி முன்னேற்றத்தைப்பற்றி ஒரு சிறிதும் யோசிப்பதில்லை. இந்தியாவில் ஆசிரிய சங்கங்கள் நாட்டுமுன்னேற்றத்துக்குரிய கல்வித் திட்டங்களைத் தயாரித்து அரசினரை ஏற்றுக் கொள்ளும்படி செய்கின்றன. நாட்டுக் கல்வி முறையைத் திருத்துவது நாட்டிலுள்ள உபாத்தியாயர் கடனாகும். நமது நாட்டு அரசினர் கொண்டுவரும் கல்வித் திட்டங்களை நம் உபாத்தியாயர்கள் ஏற்று நடாத்துவதேயொழிய, அவற்றின் நய நட்டங்களை ஆராய்ந்து வெளியிடுவதில்லை. நாட்டுக்கல்வி விருத்தி, உபாத்தியாயர்கள் முயற்சியாலேயே முன்னேற்றம் அடைய வேண்டும்.

சர்வகலாசாலைக் கல்லூரிக்குப் பிள்ளைகள்

கொழும்பிலுள்ள சர்வகலாசாலைக் கல்லூரியிற் சேரவிரும்பும் மாணவர் தொகையைக் குறைக்க வழிவகைதேடும் நோக்கமாகச் சென்ற வாரம் வித்தியா மந்திரியும், கொழும்புக் கல்லூரிகளின் தலைமையாசிரியர்களும் கூடிச் சில தீர்மானங்கள் செய்தனர். அத்தீர்மானங்கள் இங்கு ஆராயத்தக்கன. 'மற்றிக்' வகுப்புக்குப் பின்னர் ஒருவருடம் படித்த பின்னரேயே தலைமையாசிரியர் தராதலப்பத்திரத்தோடு சர்வகலாசாலைக் கல்லூரியிற் சேரவேண்டும்; அன்றேல் சேரவிரும்பும் எல்லாப்பிள்ளைகளையும் சோதித்து தகுதியானவர்களை மாத்திரம் சேர்க்க வேண்டும். பணமுடையான இக்காலத்தில் பிள்ளைகளை இன்னுமொருவருடம் மேலதிகமாகப் படிக்கச் செய்வதினல் பெற்றார் பெருநஷ்டத்துக்குள்ளாவார்கள். "இன்ரர்" (Inter) வகுப்புக் கஷ்டமாயிருப்பின் அப்பரீக்ஷை தேச இயல்புக்கேற்ப இலேசாக்குவதேயொழிய ஒரு வருடப் படிப்பைக் கூட்டுவது தகாது. தகுதியானவர்கள் மாத்திரம் உயர்தரக்கல்வியினலாகிய பலனை அடையச் செய்வதும் அநியாயமாகும். உயர்தரக்கல்வி கற்க விரும்புகிறவர்கள் யாவருக்கும் அக்கல்வியைப் பெற இடங்கொடுப்பதே முறையாகும்.

* *

குவீன்ஸ்லண்ட் என்னும் நாட்டிலுள்ள பரீக்ஷகர் ஒருவர் வித்தியாசாலை மாணக்கர்களைப் பரீக்ஷிக்கும் போது பாட்டொன்றை முடிவிலிருந்து தொடங்கி இராகத்தோடு முதல் மட்டும் படிக்கும்படி கேட்டார். இவ்வளவு மூடத்தனமான பரீக்ஷகர்கள் நமது நாட்டில் இல்லை என்று நாம் பூரணமாக நம்புகிறோம்.

* * * *

கல்வி மந்திரி தமது பதவியினின்று நீங்குவாரோ? என்பது யாவராலும் நினைக்கக்கூடிய தொன்றாகும். மந்திரிகள்எல்லாரும் சேர் ஜெயத்திலகாவுடன் சேர்ந்து தங்கள் தங்கள் பதவிகளினின்று நீங்குவார்களானல் கனம் கன்னங்கராவும் விலக நேரிடும். அவர் விலகுவாராயின் யார் கல்விமந்திரியாக வரக்கூடும்? யாழ்ப்பாண அங்கத்தவர் யாருக்காயினும் அப்பதவி கிடைக்குமோ? என்பது சந்தேகத்துக்கிடமாயிருக்கின்றது.

"இலக்கியம்"

போ. கணபதிப்பிள்ளை, ஆசிரியர், மட்டுவில்வடக்கு

உலகத்திலுள்ள மக்களெல்லோரும் ஒருவரோடொருவர் கலந்து வாழ்தலியல்பு. இத்தகைய இயல்பு வாய்ந்த மக்கள் தமதுணர்ச்சிகளையும், எண்ணங்களையும் பிறர்க்கெடுத்துக் காட்டுதலில் அவாவுடையர். ஒருவர் தமது கருத்தையோ உணர்ச்சியையோ எடுத்துக் கூறுராயின் அவருக்கு மகிழ்ச்சியும், இன்பமுந் தோன்று. எனவே தமதுணர்ச்சிகளையும், எண்ணங்களையும் பிறர்க்குப் புகட்டி அவர் அவற்றை யறியும்பொழுது தம்மைப்போலவே உணர்தலும், எண்ணுதலும் செய்து மகிழ்தலைக் காண்டலினுஞ் சிறந்த இன்பம் வேறில்லை.

ஆதலினாலேயே, ஒவ்வொருவரும் தமதுள்ளத்தைப் பிறர்க்கு வெளிப்படுத்தி வருதலை நாம் காண்கின்றோம். இவ்வாறே எல்லாம் வல்ல பரம்பொருளும் தன்னைத் தானே சூரியர், சந்திரர் முதலியவற்றானும் உலகிலுள்ள பொருள்கள் பிறவற்றானும் வெளிப்படுத்தி வருகின்றதென அறிவுநூல்கள் புகல்கின்றன. அன்றியும் அப்பரம்பொருள் அருளே யுருவாகக் கொண்டு உண்மை நூல்களையும் உணர்த்துமெனவும் அவை புகலுமென்க.

இதனானே மக்கள் தம்மை வெளிப்படுத்துவதற்கு விரும்பும் விழைவு மிகுதியே இலக்கியங்களின் தோற்றத்திற்கு ஓர் காரணமென்பது பெறப்பட்டது. இக்காரணம்பற்றியே அகப்பொருள், புறப்பொருள்களைப்பற்றிப் செய்யுட்கள் தோன்றின.

இனி மக்கள் தம் கருத்தினை வெளிப்படுத்துதலோடு பிறரெண்ணங்களையும் உணர்ச்சிகளையும் அறிந்து கொள்வதில் அவாவுடையராயும், அவர் வாழ்க்கையில் நிகழ்வனவற்றை நோக்கி இன்புறுதலும், துன்புறுதலும் காணப்படுதலின் அவர்க்குத் தம்மையொழிந்த பிற்றிடத்துள்ள பற்றும் புலப்படும். இப்பற்றுக் காரணமாகவே காதைகள், வரலாறுகள் முதலியவற்றைக் கூறும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெரியபுராணம் முதலிய நூல்கள் வெளிப்போந்தன.

இனி மக்கள் தாம் வாழும் இந் நிலவுலகிலுள்ள பொருள்களில் தங்களுக்குக் குறைவாகக் காணப்படுவனவற்றை எண்ணி யெண்ணி வருந்தி இக் குறைவுகளனைத்தும் நீங்கியிருக்கும் உயர்ந்த நிலைகளை நினைத்துக்கொண்டு இன்புறுதலைக் காண்கின்றோம். அங்ஙனம் மேன்மேலும் விழைத்தலினால் அவர்கள் மனம் தாழ்ந்த நிலையினின்றும் விலகி மேனோக்கிச் செல்லும். செல்லவே அறிவு மன்புமோங்க இன்புறுவார்கள். இவ்வின்பைப் பிறரு மெய்துவான் நூலியற்றுவார்களாதலின் மனோபாவனையாலும் இலக்கியங்கள் தோன்றுமென்பதுணரப்படும். இதனானன்றே இல்லது, இனியது, நல்லது, புனைந்துரை எனப் புலவரால் நாட்டப் பட்ட ஒழுக்கம் நான்கெனப் பிறருங் கூறினரென்க. இதுபற்றியே திருமூலரும் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றருளிச் செய்தனர். கோவை கலம்பகம்போன்ற புனைந்துரை நூல்கள் இம்மனோபாவனையால் எழுந்தனவே.

இனி மக்களுக்கியற்கையாயுள்ள ஒழுங்கு, வரையறை, அழகு, பயன் முதலியவற்றிலுள்ள இன்ப உணர்ச்சி காரணமாகவும், செய்யுளிலக்கியங்கள் தோன்றும் எதுகைமோனை முதலிய நயங்களாலும் ஓசையினிமை, சொற்செறிவு, பொருளமைதி முதலியவற்றாலும் சிறந்திருப்பன அவையேயாதலினென்க.

நாம் கண்டுங் கேட்டும் நுகர்ந்துமுள்ள பொருள்களைப் பிறர்க்குணர்த்துங்கால் நமக்குப் பிறந்த இன்ப உணர்ச்சியைப் பிறருளத்தும் உதிப்பிக்கவேண்டுமாயின் சில சில வழிகளைக் கைக்கொள்வ தின்றியமையாததாகும். அவ்வழிகளுட் பல யாப்பியல், அணியியல் முதலியவற்றால் நமக்கு விளங்குகின்றன. அவை பண்டைச் சான்றோர் கைப்பற்றிய திறங்களை நன்குணர்ந்து நமக்கு எடுத்திசைக்கின்றனவன்றி வேறன்று. ஆகவே சொல்வடிவம் பொருளமைப்பு, ஓசை ஒழுக்கு முதலியன அமைந்திருத்தல் இலக்கியங்களுக்கு இன்றியமையாப் பண்பாகுமென்பது பெறப்படும். இவற்றில் நமக்குள்ள இன்ப உணர்ச்சி காரணமாகவும் இலக்கியங்கள் தோன்றும் என்பதறியப்படும். இக்காரணம் இலக்கியங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவானது; எல்லா இலக்கியங்களினுஞ் செறிந்திருப்பது. வாழ்க்கையில் பல தன்மைகள் விரவியிருத்தல் போல இலக்கியங்களிலுமித்தன்மைகள் பலவும் விரவியிருக்கும் என்பதுணர்க.

இதுகாறும் இலக்கியங்கள் தோன்றிய வகைகளைக் கூறினோம். இனி ஒவ்வோர் காலத்திலும் தோன்றிய தமிழிலக்கியங்களைப்பற்றிக் கூறுவாம்.

தலைச் சங்க காலத்திலேயே இயல் இசை, நாடகம் எனத் தமிழிலக்கியங்கள் மூவகைப்பட்டன என்பது தொல்காப்பியத்துள்ள அம் மூன்றையும் பற்றிய குறிப்புகளாலறியக்கிடக்கின்றது. தலைச்சங்க, இடைச்சங்க இலக்கிய நூல்களுள் யாதும் முழுவதும் கிடைக்கப் பெறாமையின் அக்கால இலக்கிய முறைகளை ஆய்தற்குப் போதிய கருவிகளில்லை. கடைச்சங்க காலத்தில் தமிழிலக்கியங்கள் தனிப்பெருஞ் சிறப்புடையனவாய் யாவராலும் மதித்துப் போற்றப்பெற்றன. பத்துப் பாட்டும், எட்டுத்தொகை நூல்களும் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களும் கடைச்சங்க இலக்கியங்களாக இப்போது நிலவுகின்றன. அவற்றுள் பத்துப்பாட்டு பெரும்பாலும் தமிழ் வேந்தர்களின் பேரொழுக்கம், வீரம், கொடை முதலியவற்றையும் அக்கால மக்களின் தொழில், வாழ்க்கைமுறை, பழக்கவழக்கங்கள் ஆதியவற்றையும் துலக்கமுறக் கூறுவது. திருமுருகாற்றுப்படை மாத்திரம் முருகக்கடவுளைப் புகழ்வது. எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, கலித்தொகை, ஐங்குறுநூறு என்பன அகப்பொருளைக் கூறுவன. புறநானூறு பல அரசர் சரிதங்களையும், சிற்றரசர் வீரப் பெருமக்களி னருஞ் செயல்களையும் கூறுவது. பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் திருக்குறள் சமயம், காலம், சாதி, இடம் முதலிய வரையறையின்றி எச்சமயத்தி

பரமாப் பரவெளியாப் பார்ப்பதல்லால் மற்றெவர்க்குந், திரமேது மில்லைநன்றாய்த் தேர்ந்தேன் பராபரமே.

உழவன் பாட்டு

(தேநூர், வித்துவான், S. உமைதாணுபிள்ளை அவர்கள்)

(1) வானம்இருளக் கண்டால் — எந்தன்
மனதும் தெளியுதையோ!
மானந்தெளியக் கண்டால் — எந்தன்
மனதும் இருளுதையோ!

(2) நட்ட நாள்முதலா — இந்த
நாட்டில் மழையுமில்லை
இட்ட பயிர்க ளெல்லாம் — நாட்டில்
எங்கும் கரியலாச்சு.

(3) பயிரும் வாடக் கண்டால் — எந்தன்
பாலர் முகமும் வாடுதையோ!
நயவுள்ள தென்னை யெல்லாம் — கூடி
தலைசாய்ந்து விழுகுதையோ!

(4) வித்துமென் கையில்லை — அதை
வாங்கவும் காசுமில்லை
சொத்து மிருந்தென்ன — இன்று
சோற்றுக்குங் கஷ்டமாச்சு!

(5) இடியிடித் தென்ன — மானம்
இருண்டு கண்டாலென்ன
அடிக்கடி மின்னல் — இந்த
ஆகாயத்திற் கண்டென்ன?

(6) பாவி மழையும் விழாது — எந்தன்
பசலைகள் பசியுமீறாது
ஆவி துடிக்குதையோ — இதை
யாரிடம் சொல்வதையோ?

(7) காசைக் கண்ணால் கண்டு — நானும்
காலம் பலவாச்சே
ஆசையால் வருந்துயரை — உலகில்
அளக்க அளவுமுண்டோ?

(8) வரிப்பளு வாட்டுதையோ — எங்கள்
வயிறுங் காயுதையோ
அரிய பசியகற்ற — நான்
ஆகும் வழியறியேனே.

(9) உண்ண உணவின்றி — உயிர்கள்
ஒன்றாய் மடியுதையோ
எண்ணாத எண்ணமெல்லாம் — மனம்
எண்ணி அழியுதையோ!

(10) நகையெல்லாம் ஈடுவைத்து — இதுவரை
நாளைக் கழித்துவந்தேன்
வகையை விற்றாலும் — அதை
வாங்கவும் யாருமில்லை.

(11) இல்லாத நோயெல்லாம் — நாட்டில்
எங்கும் காணுதையோ
பொல்லாத காலமிதைப்போல் — நானும்
புவியிற் கண்டதில்லை.

(12) கண்ணில் உறக்கங்கண்டு — எனக்கு
காலம் பலவாச்சு
எண்ணாத எண்ணமெல்லாம் — மனம்
எண்ணி மடியுதையோ!

(13) வரியுங் கொடுக்கவேண்டும் — எங்கள்
வயிறுங் கழிக்கவேண்டும்
உரிய உபாயமதை — எனக்கு
உரைப்பவ ரெவருமில்லை.

(14) வேளைக் குணவின்றி — மக்கள்
வாய்விட் டழுகையிலே
மூளை கலங்குதையோ — எனக்கு
மேல்மூச்சு வாங்குதையோ!

(15) பன்றிக் குட்டிகளைப்போல் — நான்
பலகுட்டிகளை யீன்றதல்லால்
வென்றியோடு வாழ்வதற்கு — வேறு
வழியொன்று மறிந்திலனே!

வேறு

(16) பருவகாலம் வந்துலகில்
பசியையெல்லாம் நீக்கியே;
தருமமென்றுந் தழைக்கவே
தயைபுரிவாய் மழையே நீ.

(17) கண்மாரி நீங்கியென்றும்
கவலையின்றி வாழவே;
விண்மாரியே யிவ்வுலகில்
விரைந்து நீயும் ஓடிவா!

ணர்க்கும், எக்காலத்தினர்க்கும், எச்சாதியினர்க்கும், எந் நாட்டினர்க்கும் பொதுவாய் உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தனிநூலாகத் திகழ்கின்றது. அன்றியும் ஓதுதற்கெளிதாய்ச் சிந்தைக்கும், செவிக்கும் இன்பம் பயப்பதாய் நவில்தொறும், நயம்பெருகும் நூலாய் விளங்குகின்றது. ஏனைய பழந்தமிழிலக்கியங்களிலுள்ள கடுந்தமிழ்ப் பதங்களும், பத்துப்பாட்டு முதலிய நூல்களிலுள்ள இறுக்கமும் மயக்கமும் இதில் இல்லை. இதை மேற்கொள்ளாத நூல் ஒன்றும் இல்லை. ஆசாரக்கோவை நீராடல், உண்டல், வழிபடல், துயிலுதல் முதலியவற்றைப் பற்றிய விதிகளைச் சிறப்பாகக் கூறுகின்றது. திரிகடுகத்தின் ஒவ்வோர் செய்யுளும் மூன்று அரிய உண்மைகளைத் தெரிக்கின்றது.

ஏலாதி பல அறநெறிகளை விளக்குவது; கொல்லாமையை நன்கு வலியுறுத்துகிறது. பழமொழி பல அரும் பெரும் பொருள்களைப்பற்றி வகுத்து ஓதுகிறது. நாலடியார் நீதியைப் பொருளாகக் கொண்டு அறம், பொருள், இன்பம் எனும் பாகுபாட்டினைப் பின்பற்றி திருக்குறட் கருத்துக்களைப் பல இடங்களிற் கொண்டிருக்கின்றது. இன்னும் பெருந்தேவனார் பாரதம், தகடூர்யாத்திரை என்பனவும் கடைச்சங்க இலக்கியங்களாம். நிற்க.

(தொடரும்)

தேடுவேன் நின்னருளைத் தேடுமுன்னே யெய்தில்நட, மீடுவேன் ஆனந்த மாவேன் பராபரமே.

எலியின் கதை

அத்தியாயம் 9

சிறுவர் வேற்றிடஞ் சென்றமை

வெளியே ஒரு மனிதனுடைய குரல் கேட்டது. அவன் வழியே சென்ற ஒரு வேலையாளோடு பேசியதே அங்கு கேட்கப்பட்டது. "இங்கே இரண்டு சிறுவர்கள் எங்காவது வசிக்கிறார்களா" என்று அந்தமனிதன் கேட்டான். இதைச் செவியுற்ற இளையவன் அதிவிரைவாக எழுந்தான். "ஆம். அவர்கள் இங்கேதான் வசிக்கிறார்கள். அவர்கள்தான் நாங்கள்" என்று உடனே உரத்துச் சொன்னான். அதே நிமிடம் அந்த அறைக்குள் ஒரு மனிதன் வந்தான். அவனுடன் அவனுடைய மகனும் வந்திருந்தான். இவர்கள் இருவரையும் நான் மிருகக் காட்சிச் சாலையிற் பார்த்த ஞாபகம் வந்தது. சிறுவருள் மூத்தவன் தனது படுக்கையினின்றும் எழுந்தான். அவனுடைய மெல்லிய கன்னங்கள் சந்தோஷத்தாற் பூரித்துக் காணப்பட்டன.

"நீங்கள் இருவரும் இங்குதான் சீவிக்கிறீர்களா? இங்குதான் நித்திரையுங் கொள்ளுகிறீர்களா?" என்று வந்த மனிதன் கேட்டான். "ஆம் நாங்கள், இங்குதான் வசிக்கிறோம். குளிர் தாக்காவிடின் இங்குதான் நித்திரை செய்கிறோம்" என்று இளையவன் விடைபகர்ந்தான். உங்களை யெவர்களாவது வந்து காண்பதுண்டா?" என்று அந்த மனிதன் கேட்டான். "எலிகள் தான் எங்களைத் தரிசிப்பன" என்றான் இளையவன். "எலிகளோ" என்று மகன் வெறுப்புடனும் பயத்துடனும் முகத்தைச் சுளித்துக்கொண்டு கேட்டான். ஆனால், அவனடைந்த வெறுப்புணர்ச்சி யெனக்கு ஏற்படவில்லை. எலிகளாகிய நாங்கள் மனிதரை வெறுப்பதில்லை. மனிதர்தான் எங்களை வெறுப்பதும் எங்களைப் பிடித்துக் கொல்லப் பொறி வைப்பதும் ஆகும். "தந்தையே! இவர்கள் இங்கு இருக்கக்கூடாது. இந்த அறை எலிகளால் நிரம்பியுள்ளது" என்றான் மகன் தந்தையை நோக்கி. தகப்பன் மூத்தவனைக் குனிந்து பார்த்தான். அவனுடைய மணிக்கட்டையுந் தொட்டுப் பார்த்தான். அவனுடைய சுகத்தைப் பற்றி மிகுந்த அன்புடன் கேட்டான். "பிள்ளையே! உனக்குத்தேகசுகமில்லை. உன்னை நான் ஓர் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப் போகின்றேன். அங்கே உனக்குச் சகல வசதிகளும் கிடைக்கும்" என்று தகப்பன் கூறினான். "தயவு செய்து ஐயாவே" என்று மூத்தவன் கூறிவிட்டு, அப்பாற் பேச இயலாது, தன் சகோதரனைப் பார்த்து விட்டுப் பின்பு தனது புதிய நண்பனுடைய முகத்தையும் பார்த்தான். "அங்கேயென் தம்பியையுங் கொண்டுபோகலாமா" என்று கேட்டான். தகப்பன் தலையை யசைத்துவிட்டான். "அப்படியானால் நான் இங்கேதானே இருப்பேன். நாங்கள் இருவரும் ஒருவரைவிட்டொருவர் பிரியமாட்டோம்" என்றான் மூத்தவன். மகன் தகப்பனை யொருபக்கமாக இழுத்துச் சென்றதை நான் கவனித்தேன். "அவர்களுக்கு ஒரு வசிப்பிடம் தேடமுடியாதா" என்று கூறி விட்டு, மைந்தன் தன் சட்டைப் பையிலிருந்து ஏதோ ஒன்றை யெடுத்தான். மெதுவாகத் தந்தையிடம், "இது எனது சிற்றன்னையாற் புதுவருட நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது. இது போதுமா" என்று சொன்னான். தந்தையும், "ஆம் கோடைகாலம் வரும் வரைக்கும் போதும்" என்றான். மேலும் மைந்தன் தந்தையை நோக்கி, "அப்பா, என்னிடம் ஒரு வேட்டியிருக்கிறது. இந்தப் பையன் நல்ல ஆடையின்றிக் குளிரால் வருந்துகிறான். அவனுக்கு அதைக் கொடுக்கலாமா" என்று கூறினான். அப்பெருந்தகை மனிதன் தனது சம்மதத்தைப் புன்முறுவலாற் தெரிவித்துவிட்டுச் சிறுவர்களை நோக்கிச், "சிறுவர்களே! உங்களையினிமேல் நான் ஒருபோதும் இந்தத் துக்ககரமான இடத்தில் விட்டுப்போக மாட்டேன். உங்களை ஒரு நற்குணமுள்ள விதவையிடம் சேர்க்கப்போகிறேன்" என்று கூறினான்.

மூத்தவன் சிறிது மயக்கம் அடைந்தான். அவனுக்கு அம்மனிதன் கூறியன ஒன்றும் நன்றாக விளங்கவில்லை. ஆனால், அவன் அந்த இடத்தை விட்டு வேறெங்காவது போவதற்குத் தயாராக இருந்தான். தான் தனது பள்ளிக்கூடத்துக்குப் போக முடியுமோ என்பதுதான் அவன் மனதில் நினைவாயிருந்தது. அதை அவன் அந்த மனிதனுக்கு வெளியிட்டான். தேகசுகம் நன்றாக வந்தபின் போகலாம் என்று அவன் சொன்னான். தனக்கு அறுசுவையுணவு கிடைத்தாற்போன்ற பேரானந்தத்தை மூத்த

(தொடர்ச்சி 72-ம் பக்கம் பார்க்க)

உள்ளங் குழைய வுடல்குழைய வுள்ளிருந்த, கள்ளங் குழையஎன்று காண்பேன் பராபரமே.

தமிழ், தற்பாஷையா?

கடலை ஆடையாக வுடுத்த இப்பூவுலகின்கண்ணே பற்பல செல்வ வளங்களினாலுஞ் சீர்த்திபெற்று விளங்குகின்ற பரதகண்டத்துப் பண்டைக்காலந்தொட்டு வழங்கி வருஞ் சிறந்த பாஷைகளினுள்ளே தமிழ்ப்பாஷையு மொன்றேயாம். அதனுற்பத்தியை ஆராய்ந்தறியப்புகுந்தோர் யானைகண்ட குருடர்போலத் தத்தமக்குத் தோன்றிய தோன்றியவாறே கூறினர். "அகத்தியன் பயந்த செஞ்சொலாரணங்கு" "பொற்பொதியமாமுனி புகன்ற தமிழ்" என வில்லிபுத்தூரா ராதியார் கூறியவற்றைக் கண்ணுற்ற சிலர், அவை உபசாரவழக்கென் றறியாது தமிழ்ப் பாஷையைத் தந்தவர் அகத்தியரேயெனச் சாதிக்க முயன்றனர். பின்னொருசாரார் அது சமஸ்கிருதத்தினின்றும் பிறந்ததென்று மயங்கினர். இவருள் ஒருதிறத்தினரும் உண்மைகண்டனரல்லர்.

தமிழ் சொல்வளம் பொருள்வளம் முதலியவற்றால் பொலிவு பெற்றும், பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டு நின்ற புராதனபாஷையென்பது எவராலும் மறுக்கற்பாலதன்று. தமிழென்பது தனக்கிணையில்லாதது என்னும் பொருட்பேறுடைத்தாய்த் "தமி" என்னும் வினையடியாகப் பிறந்து ழகரப்பேறு பெற்றதென்றும்; கேட்போருக்கு இனிமை பயத்தலான் மதுரம் என்னும் பொருள் குறித்துத் தமிழென வழங்கிற்றென்றும் தொல்லாசிரியர் பலவாறு பெயர்க்காரணங் காட்டினர்.

திராவிட நிலத்தில் வழங்கும் கன்னடம், தெலுங்கு முதலிய பல பாஷைகளுள் தமிழுமொன்றாதலால், அதனைத் திராவிட பாஷையென்றுங் கூறப்படும்.

அங்ஙனமாகவும், தமிழினுள்ளே பல அரிய மொழிகள் காலாந்தரத்தில் நுழைந்து வழங்கிவருதல் கண்ணுற்ற சிலர், தமிழ் ஆரியத்தினின்றும் பிறந்ததென்றும், அதுபற்றியே திராவிடம் என்னும் வடமொழிப்பதம் அதன் பெயராயிற்றென்றும், திராவிடம் என்றது பின்னர்த் தமிழென மருவிற்றென்றும், தொல்காப்பிய முதலிய தமிழிலக்கணங்களுக்கு முதனூல்கள் பாணினீயம் ஐந்திரம் என்னும் வடமொழி வியாகரணங்களே யென்றும் தத்தமனதில் நிகழ்ந்த நிகழ்ந்தபடியெல்லாங் கற்பனை செய்யப் புகுந்து இடர்ப்பட்டனர்.

"அன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்று
ளொன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ?"

என்றார் இலக்கணக்கொத்துடையாரும்.

இக்காலத்து அரசர் பாஷையாகிய ஆங்கிலேய பாஷைச் சொற்கள் பல தமிழினுட் செறிந்து வழங்குதலின், தமிழ் தம் பாஷையல்லவென்றும், ஆங்கிலேயத்தினின்று பிறந்ததென்றுஞ் சாதித்தல் உண்மையாகுமா? அன்றியும் தமிழ்மொழியிலே காணப்படுஞ் சில புணர்ச்சி யிலக்கணங்களும், வினைத்தொகை, குறிப்புவினை முதலிய சொல்லிலக்கணங்களும், அகம் புறம் என்னும் பொருட்பேதங்களும், வெண்பா, கலித்துறை முதலிய செய்யுளிலக்கணங்களும், பிறவும் வடமொழியினிடத்துக் காணப்படாமையே தமிழ் ஆரியத்தினின்றும் தற்பாஷை யென்பதற்குச் சான்றாம். உயிருள் எ, ஒ என்னுமிரண்டும், மெய்யுள் ழ ற ன என்னும் மூன்றும் ஆகிய ஐந்தெழுத்துக்களுமே தமிழுக்குச் சிறப்பெழுத்துக்களாயினமை கொண்டு,

"அன்றியு மைந்தெழுத்தா லொருபாடையென்
றறையவே நாணுவ ரறிவுடையோரே"

என இலக்கணக் கொத்துடையார் பின்னு முழங்கித் தமிழ் தற்பாஷையல்லவென் றிகழ்ந்தனர். உலகத்திலே வழங்கும் எப்பாஷைக்குஞ் சிறப்பெழுத்துக்கள் சிலவேயாம், அதுபற்றி ஒரு பாஷையுந் தற்பாஷையல்லவென்று மறுத்துவிடுதல் சரியன்று.

த. சா. யோகநாதன், S. S. C. மாணவன்,
(பழுகாமம்) மட்டக்களப்பு

குட்டிக் கதை

பன்றியும் குட்டிகளும்

ச. மு.

தாய்ப்பன்றி காணமற் போனது. ஆகவே தகப்பன் பன்றிதான் தனது மூன்று குட்டிகளையும் காப்பாற்றவேண்டி வந்தது. குட்டிகளைத் தனியே விட்டுச் செல்லவும் விருப்பமில்லை. அவைகளை வைத்துக்காப்பாற்ற ஒரு நல்ல இடமுமில்லை. தேடியலைந்த பின் கடைசியில் ஒரு பழங்கொட்டில் அகப்பட்டது. அதில் தகப்பன்பன்றியும் குட்டிகளும் சீவித்து வந்தன. மாதங்கள் கழிந்தன. ஆனால் அந்தக் கொட்டிலில் நான்கு பன்றிகளும் தாராளமாக இருக்க முடியவில்லை.

இதையறிந்த பன்றிக்குட்டிகளில் ஒன்று தன் அப்பனை நோக்கி, "நாங்கள் நாலு பேரும் இருக்க இடம் காணாது. ஆகையால் நான் எங்கேயாவது போய் இடந் தேடிக்கொள்ளுகின்றேன்" என்றது. மற்றைய இரண்டு குட்டிப்பன்றிகளும் அதை ஆமோதித்தன.

தகப்பன் பன்றிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அது மிகவும் கவலைப்பட்டது. "குட்டிகளே! இப்போது நீங்கள் வெளிக்கிளம்பினால் உங்களுக்கு ஆபத்து நேரும். ஆனபடியால் போகவேண்டாம். சில காலம் கழித்துப்போகலாம்" என்று புத்தி சொன்னது. அவை கேட்கவில்லை. மூன்று குட்டிகளும் இடந்தேடச் சென்றன. அப்பொழுது தகப்பன் பன்றி "ஒரு வார்த்தை கடைசியாகச் சொல்லுகிறேன் கேளுங்கள்" என்று அழைத்தது. மூன்றாவது குட்டி நின்று அவ்வார்த்தையைக் கேட்டது. தகப்பன் செங்கட்டிகளாலேயே வீட்டைக் கட்டச்சொன்னதை மறக்கவில்லை. தகப்பன் அனுமதியுடன் புறப்பட்டது சின்னக்குட்டி.

முதற்குட்டி ஒரு கமக்காரனிடம் சென்று வைக்கோல் வாங்கி வீட்டைக் கட்டினது. இரண்டாவது நாள் அதைக் காணவில்லை.

இரண்டாவது குட்டி ஒரு தச்சனிடம் சென்று தடிகள் வாங்கி வீடு கட்டினது. சில நாட்களுக்குப்பின் ஒரு ஓநாய்க்கு விருந்தானது.

மூன்றாவது குட்டி தன் தகப்பன் பன்றி சொன்னதை மறவாமல் ஒரு குயவனிடம் சென்று செங்கட்டி கேட்டது. அவன் வேறுயாரிடமோ இருந்து வாங்கிக் கொடுத்தான். அவைகளைக்கொண்டு ஒரு அழகான குடிசை கட்டியது. மூன்றாவது பன்றிக்குக் கலியாணமும் ஒப்பேறியது. இப்பொழுதும் தன் இனத்துக்கே அரசனாக இருக்கிறது. எல்லாம் தகப்பன் பன்றியின் கடைசி வார்த்தையாலேயே நேர்ந்தன. "தந்தை சொன் மிக்க மந்திரமில்லை."

பட்டப் பகல்போலப் பார்த்தசித்தை மானின்எல்லாம், வெட்ட வெளியாக விளங்கும் பராபரமே.

‘வில்லிபுத்தூரார் நாவன்மை’

“ சண்முகவரதராஜன் ” பொன்னுலை.

அதோ! அதோ!! .... ஆகா! எவ்வளவு பரிதாபகரமான காட்சி! “ இப்படியும் ஒரு செயல் நடக்கக் கூடியதா ? ” என்று எங்களுடைய மனமே எங்களைக் கேட்டுக் கொள்கின்றது. இந்தக் காட்சியைத்தான் வில்லிபுத்தூரார் வர்ணிக்கிறார்.

தண்டார்விடலைதாயுரைப்பத்தாய்முன்னணுகித்தாமரைக்கைச்
செண்டால்அவள்பைங்குழல்பற்றித்தீண்டானுகிச்செல்கின்றான்
வண்டார்குழலுமுடன்குலையமானங்குலையமனங்குலையக்
கொண்டாரிருப்பாரென்றுநெறிகொண்டான்அந்தோகொடி
[யாளே.

துச்சாதனன் திரௌபதாதேவியின் கூந்தலைச் செண்டினால் பற்றி இழுத்துச் சென்றபோது அவளுடைய கூந்தல் குலைந்ததோடமையாது மனமும் மானமும் கூடக் குலைந்ததாம். என்றாலும் அரசவையில் தன்னைக்கொண்டார் இருப்பார் என்ற எண்ணத்துடன் செல்கின்றாளாம் அந்தக்கொடியாள். கொடியவள் அல்ல கொடிபோன்ற இடையை உடையவளாம்.

கண்ணீர் பெருகக், கால்தடுமாற, கற்கள் காலை உறுத்தத் தெருவளியே இழுபடுகிறாள் திரௌபதி. நகர ஜனங்களில் அனேகர் இந்தக் காட்சியைக் கண்ணுறுகின்றனர். கண்டுமென்ன ? காணாததுபோலத்தான். இழுத்துச் செல்பவனோ அரசகுமாரன். அவனிடம் அண்டமுடியுமா? ஜனங்கள் அனைவரும் தத்தமக்குள்ளேயே இதைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள். இந்தப் பேச்சை நேரே கேட்டுக்கொண்டிருந்தவர் போலக் கூறுகிறார் வில்லிபுத்தூரார்.

“ தழலோவெனுங்கற்புடையதனிநாயகிதன்றுமாறுங்
குழலோவுரக்கொடிவேந்தன்குலமோகுலைந்திவனென்பார்
கிழலோபுவிக்குநெருப்பன்றோநெறியொன்றில்லாநீடுபொலங்
கழலோன்மதிவெண்குடையென்பார்கையாற்கண்டகண்
[புடைப்பார்

“ கற்புக்கரசியாகிய — அதாவது நெருப்புத் தன்மை பொருந்திய கற்பை உடையவளாய் — திரௌபதாதேவியின் கூந்தல் குலைந்ததால் துரியோதனனுடைய குலமே குலைந்து விடுமோ ” என்று ஒருவர் பயப்பட்டாராம். இன்னொருவர் “ துரியோதனனுடைய வெண் கொற்றக் குடையானது இப்புவிக்கு நிழல்போன்றதா? அன்றி நெருப்பைப் போன்றதா ? என்று சந்தேகப்பட்டாராம். இப்படியே பலரின் கூற்றைக் கூறவந்தவர் இடையில் எதையோ பார்த்துவிட்டவர் போல் “ இந்தக் கொடும் செய்கையைக் கண்டவர்கள் எல்லோரும் தமது கண்களைத் தாமே அடித்துக்கொண்டனர் ” என்று கூறுகிறார். பாருங்கள்! நேரே பார்த்தவருக்கும் இவருக்கும் என்ன வேற்றுமை? இம்மட்டல்ல. கோபம், வீரம், முதலியவற்றையெல்லாம் நாம்கூட பயந்துபோகும்படி வர்ணிக்கிறார் இவர்.

துச்சாதனன் திரௌபதியை அரசவையில் வைத்து அவமானம் விளைக்கிறான். ஆனால் ஆடை சுரக்குகின்றது. துச்சாதனன் கைசோர்ந்து போனதும் வீமனுக்குக் கோபம் பொங்குகின்றது. இந்தச்சமயத்தில் தருமருடைய சொல்லையும் மீறிக்கொண்டு வீமன், துரியோதனாதியரைப் போருக்கழைக்கிறான். இந்தக் கட்டம் வில்லி புத்தூரார் வாயினின்றும் எவ்வாறு வெளிப்படுகின்றது பாருங்கள் !

அருளாரும் தருமபதி யாகாதென்
றெமைப் பலகால் அடக்க யாமு
மிருளால் வெம்பரிதி வடிவொளிப்பதுபோ
லமர் புரியா திருக்கின்றேமான
மருளான் மெய்மயங்கி யொருவலியுடையோர்
தமைப்போல மதித்து நீங்கள்
பொருளாக விருந்தனமோ நூற்றுவரும்
வருகவெதிர் பொருக வென்றான்.

“ எமதண்ணனின் வார்த்தைக் கடங்கி நின்றேமே யல்லது உம்மை ஒருபொருளாக மதித்திருந்தோமல்லோம். இப்போது நூற்றுவரும் வெளிப்படுங்கள் யுத்தத்திற்கு ” என்று வீமன் கூறினதாகக் கூறுகிறார் ஆசிரியர். இப்படியே இவருடைய ஒவ்வொரு பாடலும் படிக்கப்படிக்கத் தெவிட்டாது தேனைப்போலத் தித்திக்கும். இவருடைய பாரதத்தைப் படிக்கப் படிக்கப் பரமானந்தம் உண்டாகும்.

தமிழ் மஞ்சரி

(முதலாம் பாகம்)

[வித்தியாசாலைகளின் உபயோகத்திற்குரிய தேனப் பரீக்ஷா புத்தக சபையாரால் **3-3-36** ல் அங்கீகரிக்கப்பட்டது]

இந்நூல் செய்யுட் பாகம் வசனபாகமென இரு பகுதிகளாக வகுக்கப்பட்டிருக்கின்றது. செய்யுட் பாகத்தில் தேசாபிமானம் பாஷாபிமானம் இலக்கியச் சுவை சொல்விற்பத்தி நீதி என்னுமிவற்றை விளக்கக் கூடிய இனிமையான செய்யுள்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. வசனபாகத்தில் தெளிவான நடையில் இதற்காக எழுதப்பட்ட சிறந்த உரைநடைப் பாடங்கள் பதினைந்து சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நூல் ஆறும் வகுப்புக்குரிய இலக்கிய பாடமாகப் பல பாடசாலைகளில் உபயோகித்து வருகிறார்கள்.

விலை சதம் 50

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

தேசத் தொண்டு

மானிடப்பிறப்பை எடுத்துக்கொண்ட நாமெல்லாம்; எண்ணிறந்த தொண்டுகள் செய்யவேண்டியவராயிருக்கின்றோம். அவ்வாறு செய்யும் தொண்டுகளுள், தேசத்தொண்டுமொன்றாகும். அத்தொண்டே விசேடித்ததும், நன்மையுடையதுமாகும். தொண்டு என்றமொழி செய்ய வேண்டியது என்னும் பொருளைத் தரும். அத்தொண்டு பலதிறப்படும். அவற்றுள்ளும், பகுத்தறிவு, ஒற்றுமை, இடைவிடா முயற்சி என்னும் மூன்றுமே ஒரு தொண்டு இனிது நிறைவேற்றுதற்கு வேண்டியதாய் இருக்கின்றது. ஆதலின், தேசத்தொண்டு செய்ய விருப்பமுள்ள எல்லோரிடத்தும் பொறுமையும், அஞ்சாநெஞ்சமும், கலங்கா அறிவும், உண்மையும், அன்பும் அருளுங் குடிகொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு குடிகொண்டிருத்தலுமன்றி தம் நயங்கருதாது பிறர்நயங்கருதி உழைப்போமாக.

நிற்க! ஒற்றுமை ஒருவர் இருவரோடு மாத்திரம் இருந்தால் தேசத்தொண்டை நிறைவேற்றப்போதியதாகாது. ஆனால், அது உலகத்துள்ள மக்களாவார் அனைவரிடத்தும் ஒரு படித்தாக அமைந்தால் இனிது நிறைவேறும். அவ்வாறு ஒருவர் இருவரோடு மாத்திரம் ஒற்றுமையாயிருந்து தேசத்தொண்டு செய்து வந்தால் பல இடையூறுகளுக்குள்ளாகி பல உட்பகைஞர்களும், வெளிப்பகைஞர்களும், தவறாது தோன்றுவர்.

இனி, இடைவிடா முயற்சியினால் எவ்வகைப்பட்ட தொண்டுகளையும் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்பதை மார்க்கண்டேயர், விசுவாமித்திரர் முதலிய பெரியார்களது சரித்திரத்தினால் நன்கு அறிந்து கொள்ளலாம்.

“முயன்றால் முடியாததொன்றில்லை” “முயற்சி திருவினையாக்கும்” என்றும் அருமை பெருமை வாய்ந்த திருவாக்குகளை மனத்திலே தியானித்துத் தேசத்தொண்டை ஒற்றுமையினாலும் இடைவிடா முயற்சியினாலும் செய்துவருதல் வேண்டும். தேசத்தை நாம் முன்னேற்றத்துக்குக் கொண்டுவரவேண்டுமானால், காந்தியடிகள் திட்டத்தை மனதில் தியானித்துக்கொண்டு வருதல் வேண்டும். ஒவ்வொருவரும், சுதேசிய விரதத்தைக்கொண்டு அன்னிய ஆடைகளை நீக்கி கதர் ஆடைகளை உடுத்தல் வேண்டும். மதுவை ஒழிக்கவேண்டும். தீண்டாமையை நீக்கவேண்டும். தேசத்தொண்டிற்கு அதிதீவிர ஊழியம் செய்கிறவர்கள்போல் நாமும் செய்ய முடியாவிட்டாலும், இன்றுவரையில் தொண்டுசெய்து வருவதுடன் அப்படிச் செய்பவர்களுக்குத் தகுந்த உதவிகள் செய்யவேண்டும்! இதுவே நமக்கும் போதிய தொண்டாகும்.

இங்ஙனம்
போ. கிருஷ்ணானந்தம்
J. S. C. மாணவன்
சந்திர மௌலீச வித்தியாசாலை,
மட்டுவில் வடக்கு.

காட்டில் சொக்கப்பனை!

“வ. இ.”

ஒரு முறை மிஸ்டர் குரங்கனார் கிராமமொன்றிற்குச் சென்றிருந்தார். சில நாட்களாக அங்கே உள்ள காய்கனித் தோட்டங்களை ‘க்ளோஸ்’ பண்ணிக்கொண்டும், கிராமக் காட்சிகளைப் பார்த்துக்கொண்டும் பொழுது போக்கினார். கிராமத்தில் அவருக்கு ஆனந்தமாயிருந்த காட்சி கோயில்களில் கார்த்திகைத் தீபத்தன்று எரித்த சொக்கப்பனை.

மிஸ்டர் குரங்கு முதல்தரமான வாயாடி; செத்த பாம்பை “அதோபடமெடுத்தாடுகிறது” என்று கூறக் கூடியது. கிராமத்திலிருந்து திரும்பிக் காட்டிற்கு வந்த பொழுது அதன் சுற்றத்தவர், நண்பர்கள், மற்றைய மிருகங்கள் எல்லாம் குரங்கின் கிராமாந்தரப்பிரயாணத்தைப்பற்றி ஆவலாய்க் கேட்டன. குரங்கு தான்கண்ட உண்மையான விஷயங்களுடன், தனது கைச்சரக்கையும் சேர்த்து பிரசங்கம் செய்தது.

பிரயாணத்திலிருந்து வந்த அன்று மாலை குரங்கு தனது மூத்த குரங்குக் குட்டியுடன் ‘வாக்கிங்’ புறப்பட்டுக் காட்டிலே சென்றது. வழியில் மிஸ்டர் நரியனார் சந்தித்தார். “கிராமத்திற்குச் சென்றீராமே, அங்கே என்ன விசேஷம்” என்று கேட்டது நரி. “கிராமத்திலே ஜனங்கள் சொக்கப்பனை எரிக்கிறார்கள்” என்றது குரங்கு. “சொக்கப்பனை என்றால் என்ன?” என்று நரிகேட்டது. “அது மிக அழகான காட்சி. ஜனங்கள் தங்கள் வீடுகளுக்கெல்லாம் தீ மூட்டி விடுவார்கள். அது ஆகாயத்தை முட்ட எரியும். அப்பொழுது எல்லோரும் சேர்ந்து சந்தோஷமாய் ஆரவாரிப்பார்கள். வருடமொரு முறை வீடுகளை எரித்துவிடுவதால் தங்கள் பாபங்கள்; துன்பங்கள் எல்லாம் அழிகிறது என்பது அவர்கள் கொள்கை. எரித்தபின் வேறு புதிய வீடுகட்டிக் கொள்வார்கள்” என்று பெரிய புழுகுவிட்டது குரங்கு. நரி இவற்றை நம்பாவிட்டாலும் அப்பாலும் தொடர்ந்து சம்பாஷித்தது. இதற்கிடையில் குரங்கினுடைய குட்டி குரங்கை விட்டுவிட்டு வீட்டிற்குச் சென்றுவிட்டது. குரங்கும் கொஞ்சநேரம் நரியுடன் பேசிவிட்டு வீட்டிற்கு வந்தது. அது வீட்டைச் சமீபித்தபோது அங்கே கண்ட காட்சி அதற்கு இடியிடித்தாற் போன்றிருந்தது. மிக அழகாக அது கட்டிவைத்திருந்த வீடு சுவாலித்து எரிந்துகொண்டிருந்தது. குரங்குக்குட்டி துள்ளிக் குதித்துக்கொண்டிருந்தது. குரங்கைக் கண்டதும் குட்டி ஓடி வந்து, “அப்பா, நீங்கள் நரிமாமாவுக்குச் சொன்னது போல் சொக்கப்பனையாக வீட்டைக் கொழுத்தி விட்டேன். இனி எங்களுடைய பாவம் துன்பமெல்லாம் பறந்துபோம்” என்றது.

எப்படியிருக்கிறது புழுகின் மகிமை!

பாட்டுக்கோ அன்பினுக்கோ பத்திக்கோ அன்பர்தங்கள், நீட்டுக்கெல் லாங்குறுகி நின்றாய் பராபரமே.

ஈழகேசரி இளைஞர் சங்கம்

குழந்தைகாள்!

எல்லாரும் சுகத்தோடிருக்கிறீர்களல்லவா? கார்த்திகை மார்கழியில் கொஞ்சம் கவனமாய் உலாவுங்கள். மழை தண்ணீரில் நனைந்து போகவேண்டாம். வழி தெருக்களில் கள்வர்களும் காடையர்களும் அதிகம். பத்திரமாய்ப் பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டும்.

அடுத்த வார இதழில் உங்களுடைய சிறுகதைகளில் விசேஷமான இரண்டு பிரசுரிக்கப்படும்; அவர்களின் பரிசுகளும் அனுப்பப்படும். உங்களுடைய வசதியை முன்னிட்டு இன்னும் வருகிற புதன்கிழமை வரையில் சிறுகதைகளை ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன். எங்கே பார்க்கலாம். உங்கள் எழுத்து வன்மையைத் தாத்தாவுக்குக் காட்டுங்கள்.

1939-ம் ஆண்டு தொடக்கம் எங்கள் சங்கத்தைக் கொஞ்சம் புதுமாதிரியாக நடத்த எண்ணியிருக்கிறார் தாத்தா. நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? நல்ல சங்கதிதானே; இப்ப கொஞ்சக்காலமாகக் குழந்தைகளெல்லாம் முன்போல் அவ்வளவாக உற்சாகத்தோடு காணப்படவில்லை. ஆகையால் எல்லாரையும் தட்டியெழுப்பி இன்னும் எங்கள் சங்கத்தில் பல நூறு குழந்தைகளைச் சேர்த்துவைத்துக்கொண்டு பெரிய பெரிய காரியங்களெல்லாம் செய்ய வேண்டுமென்று தாத்தாவுக்கு மிகவும் ஆவல். ஆகையால் வருகிற தைமாதம் முதற்கொண்டு எங்கள் சங்கத்துக்குப் புதிய புதிய அம்சங்களெல்லாம் வரப் போகின்றன. எல்லோரும் ஆயத்தமாயிருங்கள். கட்டுரைப் பரிசுகள், கதைப்பரிசுகள், பாடசாலைகளுக்குப் பரிசுகள், வெள்ளிக் கிண்ணங்கள், தங்கமெடல்கள் ... என்றெல்லாம் விஷயங்கள் காத்திருக்கின்றன.

தாத்தாவுக்கு இப்போது கொஞ்சம் காயகல்ப வைத்தியம் செய்து இளமை அரும்புகிறது. அதுதான் இப்படியான யோசனைகள் உதித்திருக்கின்றன. உங்கள் அபிப்பிராயங்களையும் உடனே தெரியப்படுத்துங்கள்.

ஒரு முக்கியமான சங்கதி உங்களெல்லோருக்கும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆறுமாதத்துக்கு மேல் தங்கள் சந்தாவைப் புதுப்பிக்காத அங்கத்தவர்களெல்லாரும் உடனே 12 சத முத்திரை அனுப்பிப் புதுப்பித்துக்கொள்வீர்களாக. இல்லாவிடில் அங்கத்தவராக இருக்கும் உரிமையை இழக்கவேண்டி நேரிடும். ஆகையால் ஞாபக மறதியாக இருந்த பழைய அங்கத்தவர்களெல்லாரும் உடனே புதுப்பித்துக்கொள்ளவும். அதோடு புதிய அங்கத்தவர்களையும் உங்கள் சங்கத்தில் சேர்த்துவையுங்கள். அப்படிப் புதுப்பிக்காதவர்கள் கதைப்போட்டி முதலியனவைகளிற் கலந்துகொள்ள முடியாதென்பதை ஞாபகத்தில வைத்துக்கொள்ளவும்.

—“தாத்தா”

விண்ணப்பப் பத்திரம்

திகதி.....................................

அன்பார்ந்த தாத்தா!

தயவுசெய்து “ஈழகேசரி இளைஞர் சங்கத்”தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறு மாத சந்தாப்பணமாக அனுப்பியிருக்கிறேன். [இந்தியா 2 அணு; மலாயா 16 காசு.]

பெயர்...

பிறந்த திகதி.........மாதம்.................வருடம்...........

விலாசம்...

....

பெற்றோர், அல்லது உபாத்தியாயர்

கையொப்பம் ....

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி ‘தாத்தா’ c/o ‘ஈழகேசரி’, சுன்னாகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

ஈழகேசரி கல்வி அனுபந்தம்
தனிப்பிரதி விலை. சதம்—3
25 பிரதிகள் விலை சதம்—50
தபாற் செலவு வேறு
ஆண்டுச்சந்தா ரூபா 2.
முற்பணமின்றி அனுப்பப்படமாட்டாது

எலியின் கதை

(68-ம் பக்கத் தொடர்ச்சி)

வன் அடைந்து மகிழ்ச்சியின்பேரால், “கூ, கூ” என்றான்.

தந்தையும், மைந்தனும், சிறுவர் இருவரும் அந்த அறையை விட்டு விலகினார்கள். “இனிமேல் எப்போதாவது இந்த அறையை வந்து பார்வையிட உனக்கு விருப்பமில்லையா” என்று மைந்தன் கேட்க, மூத்த சிறுவன், “இல்லை, இல்லை, இல்லவேயில்லை. ஆனால், அந்தப் புள்ளி எலியிருக்கிறதே. அது அந்தக் குருட்டெலிக்கு உணவு கொடுக்கும் காட்சியைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் மாத்திரம் ஒன்று உண்டு” என்றான்.

(தொடரும்)

யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு ‘திருமகள்நிலைய’ த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் ‘தலையாட்டி’ யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1938-ம் ௵ டிசம்பர் ௴ 11௳ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது